**செய்தி வெளியீடு எண் : 1256** **நாள் : 26.07.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**நாவலூரில் உள்ள காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் புதிய அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.7.2022) நாவலூரில் உள்ள ஒசோன் டெக்னோ பூங்காவில் காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் சார்பில் 6,00,000 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார். இப்புதிய அலுவலகத்தில் 5000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிவர்.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்து வருகிறது. 2030-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் காரணமாக, IT / ITeS, Saas, ஹைடெக் எலக்ட்ரானிக்ஸ், வாகன உற்பத்தி போன்ற துறைகளைச் சார்ந்த பல உலகளாவிய நிறுவனங்களுக்கு தொழில் தொடங்க ஏற்ற இடமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

காக்னிசன்ட் நிறுவனம் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிறுவப்பட்டது, முதலில் சென்னையில் 50 பணியாளர்களுடன் செயல்படத் தொடங்கிய இந்நிறுவனம் தற்போது சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் சிறப்பான முறையில் செயல்பட்டு, உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது.

உலகளாவிய மாபெரும் நிறுவனமாகவும், அமெரிக்காவில் பட்டியலிடப்பட்ட முதல் பில்லியன் டாலர் நிறுவனங்களில் ஒன்றாகவும் காக்னிசன்ட் நிறுவனம் விளங்கி வரும் இந்நிறுவனம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், டிஜிட்டல் திறன் மேம்பாட்டிலும், தமிழ்நாட்டை உலகளாவிய தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றுவதற்கும் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வருகிறது. சுமார் 81,000-க்கும் அதிகமான பணியாளர்களை கொண்டுள்ள இந்நிறுவனம், பெண்களை பெருமளவில் பணியமர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய அலுவலக திறப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணியாளர்களுடன் உரையாடிய போது, தமிழ்நாடு அரசு தொழில் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ். பாலாஜி, வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திருமதி பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., காக்னிசன்ட் (இந்தியா) நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜீவ் நம்பியார், உலகளாவிய விநியோகத் தலைவர் திரு. ஆன்டி ஸ்டப்போர்டு, முதுநிலை துணைத் தலைவர் மற்றும் மையத் தலைவர் (சென்னை) திரு. கணேஷ் கல்யாணராமன், துணைத் தலைவர் மற்றும் அரசு விவகாரங்கள் தலைவர் திரு. அஸ்ரா கவுரவ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in